2020 மார்ச் 12]

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

தொழிற்பயிற்சி நிலையம்

***58923—திரு ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி தொகுதிகளுக்கு இடையே தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி தொகுதிகள் அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 17 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் ஒப்பளிக்கப்பட்ட 4,361 இருக்கைகளில், மொத்தம் 1,293 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இக்காலியிடங்களில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்தில் செயல்படும் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 104 இருக்கைகளில் 46 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 58 இருக்கைகள் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளன. எனவே, சேலம் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி தொகுதிகளை மையமாகக் கொண்டு, அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்தும், மறைந்தும் வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா வழியில் இந்தியாவே போற்றும் வகையில் சிறப்பாக நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு குடிமராமத்து நாயகர்; காவேரி மீட்பு நாயகர்; காவேரியின் காப்பாளர்; விவசாயிகளின் விடிவெள்ளி; வாழும் கரிகாலன்; எளிமையின் அடையாளம்; சேலம் தந்த தங்கமகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் டாக்டர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். ஒரு கொடியில் பூத்த இரு மலர்களைப்போல விளங்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும்" என்பார்கள். அதைப்போல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கும் வள்ளல். நல்ல மனம் படைத்த எடப்பாடியார் அண்ணன் அவர்கள், ஆசிய கண்டத்தில், எங்குமே இல்லாத அளவில், ஆத்தூர், தலைவாசல் கூட்டுரோடு பகுதியில் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், புத்திரகவுண்டம்பாளையம், உமையாள்புரம் கிராமத்தில் ஒரு சிப்காட் தொழிற்சாலையை 4.5 கோடி ரூபாய் மதிப்பில் அமைத்துக் கொடுக்க உத்தரவு வழங்கியதற்காக சேலம் மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர் இளங்கோ அவர்களும், எனது தொகுதி மக்களும், நானும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 11 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. சேலம் கிழக்கு பகுதியில், வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், கெங்கவல்லி ஆகிய நான்கு வருவாய் வட்டங்களும், ஆத்தூர் நகராட்சி, நரசிங்கபுரம் நகராட்சி மற்றும் எட்டு பேரூராட்சிகளும் கொண்ட மூன்று சட்டமன்ற தனித் தொகுதிகளும் உள்ளன. மக்கள்தொகை சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது. இப்பகுதி விவசாயம் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள், 75 கிலோ மீட்டர் தூரம் சென்று தொழிற்பயிற்சி படிக்க வேண்டியுள்ளது. (குறுக்கீடு)

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மற்றொரு கேள்வி உள்ளதால், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *ஆத்தூர் தொகுதியின் அருகே உள்ள விதைப் பண்ணையில் 250 ஏக்கர் நிலம் போதுமானதாக உள்ளது. ஏழையெளிய மாணவர்களின் நலன் கருதி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை மீண்டும் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் 89 அரசு மற்றும் 476 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. இதில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 9 ஆண்டுகளில் 28 புதிய தொழிற்பயிற்சி நிலையங்களை உருவாக்கி, சாதனை படைத்துள்ளார், காவேரி காப்பாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எடப்பாடியார் அவர்கள்.*

முற்பகல் 11–45

மேலும், ஸ்ரீவெங்கடேஸ்வரா ஐ.டி.ஐ., நாகையம்பட்டி, 27 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதில் 86 இடங்கள் காலியாக உள்ளன. சாரதா மெமோரியல் ஐ.டி.ஐ., ஆத்தூர் 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதில், 86 இடங்கள் காலியாக உள்ளன. தியாகராஜா ஐ.டி.ஐ., வாழப்பாடி 23 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது; 47 இடங்கள் காலியாகவுள்ளன. புஷ்பம்மாள் ஐ.டி.ஐ., ஆத்தூர் 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது; 20 இடங்கள் காலியாகவுள்ளன. எனவே, மாணவர்கள் இந்த இடங்களில் சேர்ந்து படிக்கலாம். ஆயினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பகுதியில் அவசியம் ஏற்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கிழக்குப் பகுதியில் சுமார் 50 மேல்நிலைப் பள்ளிகளும், 50-க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. ஒரு வருடத்திற்கு 10,000 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். இவர்களுடைய நலன்கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றித் தருவேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியதற்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

பேருந்து வசதி

***38088—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியிலிருந்து ஒட்டக்கோவில்பட்டி, அலங்கம்பட்டி, கம்பூர், கேசம்பட்டி, வெள்ளிமலைப்பட்டி மற்றும் புலிப்பட்டி வழியாக அழகர்கோவிலுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக அழகர்கோவிலிலிருந்து வள்ளாலப்பட்டி வழியாக மேலூருக்கு 26 தனி நடைகளும், மேலூரிலிருந்து வள்ளாலப்பட்டி வழியாக புலிக்குடிக்கு 16 தனி நடைகளும், மேலூரிலிருந்து வள்ளாலப்பட்டி, புலிக்குடி வழியாக வெள்ளிமலைப்பட்டிக்கு 6 தனி நடைகளும், மேலும்